## தொண்டர்கள் செயற்திட்டம்

- இந்த சமூகத்தில் தேவைகள் உள்ளவர்களுக்கு பிரதியுத்தரம் செய்வதற்காக வருடத்திற்கு ஏறக்குறைய 40 புதிய தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம்
- விண்ணப்பங்கள், நேர்காணல் முறைகள், குற்றவியல் தரகு சரிபார்த்தல் மற்றும் அவரைப் பற்றி இன்னொருவரிடம் விசாரித்து அறிவது போன்றவைகளால் தொண்டர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்
- தொண்டர்கள் மாதத்திற்கு இரண்டு முறை பன்னிரண்டு மணி நேர பணிகளுக்கும் மாதாந்தர உத்தியோக அபிவிருத்திப் பயிற்சிக்கும் சம்மதிக்கிறார்கள்

**தொண்டர்கள்:**

- 21 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருக்க வேண்டும்
- யோர்க் பிரதேசத்தில் வசிக்க வேண்டும்
- செல்லுபடியாகும் “G” வகுப்பு வாகன அனுமதிப் பத்திரம் வைத்திருக்க வேண்டும்
- நம்பகமான வாகனம் இருக்க வேண்டும்
- $1,000,000.00 வாகனக் காப்புறுதி இருக்க வேண்டும்
- கடந்த 2 வருடத்திற்குள் பாதிக்கப்படாதவராக இருக்க வேண்டும்
- மனநிலை சேதப்படக் கூடிய பாகம் சரி பார்த்த கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்
- மூன்று தனிப்பட்ட சிபாரிசுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்
- குறைந்த பட்சம் 40 மணி நேரப் பயிற்சித் திட்டத்திற்கு வருகை தர வேண்டும்
- குறைந்த பட்சம் மாதத்திற்கு 2 -12 மணிநேரம் தொண்டு செய்யத் தயாராக இருக்க வேண்டும்
- மாதாந்தர உத்தியோக அபிவிருத்திப் பயிற்சிக்கு வருகை தர தயாராக இருக்க வேண்டும்
- மின் வலையச் சேவையும் மின் அஞ்சலும் வைத்திருக்க வேண்டும்

தொண்டராக விரும்புவீர்களானால் www.victimserivces-york.org என்ற எமது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள் அல்லது (905) 474-2955 என்ற இலக்கத்தில் எமது அலுவலகத்தை அழையுங்கள்.

## யோர்க் பிரதேச பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள்


4981 Hwy 7 East
Unit 12A, Suite 243
Markham, Ontario L3R 1N1
அலுவலகத் தொலைபேசி: (905) 474-2955
தொலைநகல்: (905) 513-7933
மின் அஞ்சல்: victimservices@police.york.on.ca
www.victimservices-york.org


**பின் வருபவர்களின் துணையுடன்:**
யோர்க் பிரதேச பொலிஸ் மற்றும் ஒன்ராறியோ மாகாணப் பொலிஸ்


**நிதி வழங்கியவர்கள்:**
அரசாள் சட்டத்தரணி அமைச்சின் பாதிக்கப்பட்டவர்கள் சேவைப் பிரிவு, ஒன்ராறியோ திரிலியம் தர்ம ஸ்தாபனம், யோர்க் பிரதேச யுனைரற் வே மற்றும் உள்ளூர் பொதுஜன நிதித்திரட்டல் ஆகியோர்
தர்ம ஸ்தாபனப் பதிவு
இலக்கம் 87107 4068 RR0001


United Way of York Region

# யோர்க் பிரதேச பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள்

### ஆபத்தான நிலையில் உள்ளவர்களின் தேவைகளைச் சந்திப்பதன் மூலம் பொது ஜன சமூகத்தை மீண்டும் கட்டி எழுப்புவது

---

யோர்க் பிரதேச பொலிஸ் மற்றும் ஒன்ராறியோ மாகாணப் பொலிஸ் சேவைகளுடன் இணைந்து செயல் படுவது

## பொதுஜன சமூகத்தை மீண்டும் கட்டி எழுப்புவது:

குற்றங்களாலும் துக்ககரமான நிகழ்வுகளாலும் விளையும் பாதிப்புகளுக்கு யாரும் விதிவிலக்கில்லை. ஒரு பொலிஸ் அதிகாரி பின்னிரவு நேரத்தில் கதவைத் தட்டி எமது அன்புக்குரியவர் ஒருவரைப் பற்றி கெட்ட செய்தி தருவது எம்மில் அநேகருக்கு ஒரு ஆழமான பயமாகும். அத்தகைய வேளைகளிலே, யாராவது நம் அருகில் நின்று நமக்கு ஆதரவளிப்பது நம் அனைவருக்கும் அவசியமாகும்.

இங்கே தான் யோர்க் பிரதேச பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள் உட்பிரவேசிக்கின்றது. யோர்க் பிரதேச பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள் என்பது யோர்க் பிரதேச பொலிஸ் மற்றும் ஒன்ராறியோ மாகாணப் பொலிஸ் சேவைகளுடன் இணைந்து, குற்றங்களாலும் துக்ககரமான நிகழ்வுகளாலும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு 24 மணி நேர மானசீக ஆதரவும் செயல்முறை உதவிகளும் வழங்கும் இலாபம் எதிர்பாரா தர்ம ஸ்தாபனமாகும்.

## பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள் செயற் திட்டங்கள்:

### 1. நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு வருகை

- நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு வந்து தலையிடுவதற்கு, யோர்க் பிரதேச பொலிஸ் மற்றும் யோர்க் பிரதேசத்தில் உள்ள ஒன்ராறியோ மாகாணப் பொலிஸ் சேவைகளின் அழைப்புகளை 24/7 ஏற்றுக் கொள்ளப் பாதிக்கப்பட்ட வர்களுக்கான உதவிக் குழுக்கள் உள்ளன.
- குற்றம் நிகழ்ந்த இடம், பொலிஸ் நிலையம், வைத்தியசாலை அல்லது வீட்டிற்கு வருகை தந்து தலையிடுதல்.

### 2. தொலைபேசி மூலம் ஆபத்துகளுக்கு உதவி

- குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொலைபேசி மூலம் தொடர்ச்சியான உதவியும் சமூக இணைப்புகளும் பணியாளர்களால் வழங்கப்படுகின்றன.
- குற்றங்களாலும் துக்ககரமான நிகழ்வுகளாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு 24 மணிநேரத் தொலைபேசி மூலம் உதவி

### 3. சமூகத்துடன் இணைந்து செயல்படுதல்

- பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள், குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளைத் தெரிவித்து பல்வித சமூகக் குழுக்களில் பங்கு பெறுகின்றது.
- பாடசாலைகள், சமூகக் கருத்தரங்குகள், பொது அறிமுகங்கள் ஆகியவற்றுக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள் வருகை தந்து, தடுப்பு, பாதுகாப்பு, அறிகுறிகள் மற்றும் குற்றங்களின் விளைவுகள் ஆகியவற்றைப் பற்றி சமூகத்திற்கு கல்வி புகட்டுகின்றனர்

### 4. உதவி இணைப்பு

அந்தரங்கமாகப் பழகிய முன்னாள் துணைவர் மூலம் வன்முறை அனுபவிக்கும் ஆபத்து அதிகமாக இருப்பவர்களுக்கு உதவுவதற்கு இச் செயற்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. பாலியல் வன்முறை, குடும்பத்தில் வன்முறை மற்றும்/அல்லது குற்றங்களால் அலைக்கழிக்கப்படுபவர்கள் 911 இணைப்பு மட்டும் அடங்கிய கைத் தொலைபேசியைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கலாம்.

இச் செயற்திட்டத்தில் அடங்கும் மூன்று உறுப்புகள்

- வாடிக்கையாளருக்குத் தனிப்பட்ட முறையில் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்படுகிறது.
- 911 இணைப்பு மட்டும் அடங்கிய கைத் தொலைபேசி வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகிறது
- தமது சொந்த பாதுகாப்புத் திட்டத்திற்கு தொடர்ச்சியான உதவியையும், புதிய செய்திகளையும், மீள் பரிசீலனைகளையும் வாடிக்கையாளர் பெறுகிறார்.

## நாம் உதவும் சந்தர்ப்பங்கள்:

| | |
|---|---|
| - குடும்ப வன்முறை | - குடும்ப நிகழ்வுகள் |
| - பாலியல் தாக்குதல் | - தாக்குதல் |
| - திருட்டு | - தீ விபத்து |
| - திருடர் உட்புகுதல் | - கொலை |
| - திடீர் மரணம் | - வாகன விபத்துகள் |
| - சொத்து சம்பந்தமான குற்றங்கள்/ சேதங்கள் | |
| - குற்றங்களால் அலைக்கழிப்பு | |

## நாம் சேவை செய்யும் சமூகத்திற்கு எமது முக்கியத்துவம்:

- ஒரு குற்றம் மற்றும்/அல்லது துக்ககரமான நிகழ்வின் தாக்கத்தினை சமாளிக்க, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது
- சமூகத்தில் தகுந்த உதவிச் சேவைகளைப் பெறப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது
- பாதிக்கப்பட்டவர்களுக்கும் குடும்பங்களுக்கும் மன அதிர்ச்சியைக் குறைப்பது
- குற்றங்களால் விளையும் பாதிப்புக்களை எதிர் கொள்வதில் மேலும் ஈடுபட சமூகத்திற்குச் சந்தர்ப்பமளிப்பது
- பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி அளிப்பதைப் பற்றி சமூகத்திற்கு கல்வி புகட்டவும் அதை முன்னேற்றவும்
- கல்வி புகட்டுவதன் மூலம் தடுப்பு முறை நோக்கிச் செல்வது

நாம் நன்கொடையாக $__________ கொடுப்பதன் மூலம் யோர்க் பிரதேச பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகளுக்கு உதவுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்

காசோலைகளை Victim Services of York Region Inc. என்ற பெயருக்கு அனுப்பவும்

வருமானவரி ரசீதுகளை பின்வருபவருக்கு அனுப்பவும் (தெளிவாக எழுதவும்):

பெயர்____________________

விலாசம்____________________

நகரம்__________ மாகாணம்______ தபால் கோடு______

வீட்டுத் தொலைபேசி இலக்கம்__________ அலுவலகத் தொலைபேசி இலக்கம்__________

மின் அஞ்சல் ________________ திகதி______

யோர்க் பிரதேச பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைக்கும் நாம் சேவை செய்யும் சமூகத்திற்கும் ஆதரவு தந்தமைக்கு நன்றி

4981 Hwy 7 East, Unit 12A, Suite 243.,
Markham ON., L3R 1N1 (905) 474-2955